| O.S.No. 06/2025 | PW1: திருமதி. சித்ரா க/பெ. திரு. ஜெகந்நாதன் | 17-03-2026 |
|---|---|---|

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**
**(சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு கூடுதல் முதல் விசாரணை வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டு கூடுதல் முதல் விசாரணை சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.)**

**<u>கூடுதல் முதல் விசாரணை</u> :**

1. என்னிடம் காட்டப்படும் கூடுதல் முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அதனை நான் சொல்லிதான் எனது வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டது. அதனை படித்து பார்த்து, வழக்கறிஞர் படித்து சொல்ல சரியென்று ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தேன். எனது தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்து குறியீடு செய்கிறேன்.

| வ.எண். | தேதி | ஆவணங்கள் |
|---|---|---|
| 1. | 11-05-1993 | வீட்டு மனை ஒப்படைவு நமூனா – அசல் – வா.சா.ஆ.10. |
| 2. | 24-12-2021 | நத்தம் நிலவரி தூய சிட்டா – சான்று நகல் – வா.சா.ஆ.11. |
| 3. | – | எனது பெயரில் உள்ள 'அ' பதிவேடு – கணினி நகல் – வா.சா.ஆ.12. |
| 4. | 26-09-2021 | எனது பெயரில் செலுத்திய குடிநீர் குழாய் வரி ரசீது – அசல் – வா.சா.ஆ.13. |
| 5. | 24-02-2025 | எனது பெயரில் செலுத்திய வரி ரசீது – வா.சா.ஆ.14. |

எனவே, தாவாப்படி தீர்ப்பாக வேண்டி பிராத்திக்கிறேன்.

**<u>குறுக்கு விசாரணை</u> :**

(1-ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/– சித்ரா

சாட்சியின் கையொப்பம்

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.03.17 11:36:28 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**